செய்தி வெளியீடு எண்: 676 நாள் : 16.12.2015

**<u>தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6</u>**

## செய்தி வெளியீடு

சமீபத்தில் பெய்த கடுமையான வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக பாடநூல்களை இழந்த பள்ளிக் குழந்தைகளுக்கு பாடநூல்கள் கிடைக்க முனைப்பான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான பாடநூல்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

சுயநிதிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எவரேனும் பாடநூல்களை இழந்திருந்தால் அவர்களுக்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக இணையதள வழி ***(www.textbookcorp.in)*** வாங்கிட உரிய பதிவு செய்து தத்தம் வீட்டு முகவரியிலேயே பாடநூல்களை பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வட்டார அலுவலகங்களிலும் போதுமான புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன.

தவிரவும், தனியார் பள்ளிகள் கூடுதல் பாடநூல்கள் கோரும் நிகழ்வுகளில், ஏற்கெனவே உள்ள நடைமுறைப்படி இணைய வழி சேவையைப் பயன்படுத்தி உடனுக்குடன் பாடநூல்களை பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**